# மாணவர் இலக்கியப் பேரவை விழா

மாணவர் இலக்கியப் பேரவை விழா 16.12.2017 சனிக்கிழமை அன்று புத்தனாம்பட்டி நேரு நினைவுக் கல்லூரி மூக்கப்பிள்ளை கலையரங்கில் காலை 10.30மணிக்கு நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் யு.சு.பொன்பெரியசாமி, வரவேற்புரை வழங்கினார். கல்லூரி ஆட்சிக்குழுத் பெருந்தலைவர் **பேராசிரியர்.மூ.பொன்னம்பலம்** தலைமை உரை நிகழ்த்தினார். திருச்சிராப்பள்ளி, உருமு தனலெட்சுமி வித்யாலாயா தமிழாசிரியர் **முனைவர்.இரா.மாது** சிறப்புரை வழங்கினார். அவர் பேசும்போது அதர்மம் ஆர்பரிக்கும். ஆனால் தோல்வியுறும். தர்மம் ஓசையில்லாமல் தன் வேலையைச் செய்யும். ஆனால் வெற்றிபெறும். யோகம் என்பது பொருந்தச் செய்வது. மாணக்கர்கள் மனம் ஒன்றிக் கற்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுவே யோகமாகும். பெற்றோர்களையும்இ ஆசிரியர்களையும் போற்றும் பண்பு இன்று குறைந்து வருகிறது. பெற்றோர்களைஇ ஆசிரியர்களை மாணவர்கள் மதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். பெற்றோர் சங்கத்தலைவர் அ.ராமதாஸ் மாணவர் பேரவைப் பிரதிநிதிகளுக்குச் சிறப்புச் செய்தார். **இலக்கியப் பேரவை விழாவில்** 650 **மாணவ மாணவிகள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்**. சரவணன் இ மாணவர் இலக்கிய மன்றச் செயலர்இ நன்றியுரை நிகழ்த்தினார். விழா நிறைவில் மாணவர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

16/12/2017

முதல்வர்

**நேரு நினைவுக் கல்லூரி**

**(தன்னாட்சி)**

**புத்தனாம்பட்டி - 621 007**

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**